2026 ஏப்ரல் மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 136/2025

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW12 (LW12) – தமிழ்செல்வி |
| கணவர் பெயர்: | ராசையா |
| ஊர்: | மாரியம்மன்கோவில்பட்டி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இல்லத்தரசி |
| வயது : | 50 |

29.04.2026

(1, 2, 4, 8 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் தேனி மாவட்டம், மாரியம்மன்கோவில்பட்டியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். பால்பாண்டி என்பவர் இறந்துவிட்டார். அவர் என்னுடைய ஊர்க்காரர் ஆவார். பால்பாண்டி தற்போது உயிருடன் இல்லை, இறந்துவிட்டார். பால்பாண்டி எப்படி இறந்துபோனார் என்று எனக்கு தெரியாது.

<u>சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 08.03.2015ம் தேதி மதியம் 3.30 மணியளவில் பால்பாண்டி அவர் குடியிருந்த வீட்டில் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லி மருந்தை குடித்துவிட்டதாகவும், அவரை க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றதாகவும், சிகிச்சை பலனின்றி பால்பாண்டி அங்கு இறந்துவிட்டதாகவும், பால்பாண்டிக்கு கடன் கொடுத்தவர்கள் கொடுத்த பணம் மற்றும் வட்டிப் பணத்தைவிட மிகவும் அதிகமாக கேட்டு தொந்தரவு செய்து தரக்குறைவாக பேசியதால் தான் விஷமருந்தை குடித்து தற்கொலை செய்து கொண்டார் என்று தெரிந்து, போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, எதிரிகள் எனது ஊரக்காரர்கள் என்பதாலும், எனக்கு தெரிந்தவர்கள் என்பதாலும், போலீசார் விசாரணையில் சொல்லிய சங்கதிகளை மறைத்து, தற்போது அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 29.04.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.04.29 18:15:07 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
29.04.2026